கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 114, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

114—

பேருந்து வசதி

***40917—திரு. பி. முருகன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி ஒன்றியம், சூளகிரியிலிருந்து உலகம் கிராமம் வரை இரவு 8–30 மணிக்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி ஒன்றியம், சூளகிரியிலிருந்து உலகம் கிராமத்திற்கு 2 பேருந்துகள்மூலம் நாளொன்றுக்கு 12 நடைகள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களின் வசதிக்காக பள்ளி மற்றும் கல்லூரி நேரங்களிலும் மற்றும் பொது மக்களின் வசதிக்காகவும் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், இவ்வழித்தடத்தில் இயக்கப்படும் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளின் அடர்வு சராசரியாக 50 விழுக்காடே உள்ளதால், தற்போதுள்ள பேருந்து வசதிகளே போதுமானதாகக் கருதப்படுகிறது. எனவே, தற்சமயம் வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரி ஒன்றியம், சூளகிரி முதல் உலகம் கிராமம் வரை இரவு 8–30 மணிக்கு பேருந்து இயக்கிட இயலாத நிலையுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

2020 மார்ச் 17]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் அவர்கள்.

திரு. பி. முருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் கழகத் தலைவர் அவர்களை வணங்குகிறேன்.

வேப்பனஹள்ளி தொகுதி, சூளகிரியிலிருந்து உலகம் கிராமம் மற்றும் இராயக்கோட்டை வரை மாலை 6 மணிக்குமேல், அரசு பேருந்தோ அல்லது தனியார் பேருந்தோ இயக்கப்படவில்லை. எனவே, அப்பகுதியிலுள்ள சுமார் 30–க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சார்ந்த பொது மக்களும், விவசாயிகளும், மாணவர்களும், ஓசூர் மற்றும் பெங்களூருவுக்கு வேலைக்குச் சென்றுவரும் தொழிலாளர்களும் பேருந்து வசதி இல்லாமல் பெரிதும் அவதிப்படுகின்றனர். குறிப்பாக, வேலைக்குச் சென்றுவரும் பெண்கள் மிகவும் அவதிக்குள்ளாகிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கருத்தில்கொண்டு, இப்பகுதிக்கு மாலை 6 மணிக்குமேல் இரவு 10 மணி வரை அரசுப் பேருந்துகளை இயக்க முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாலை 5–55 மணிக்கு அரசுப் பேருந்து ஒன்று சூளகிரியிலிருந்து உலகம் கிராமம் வழியாக இராயக்கோட்டை வரை, பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களின் வசதிக்காக இயக்கப்பட்டு வருகிறது. மேலும், தனியார் பேருந்து ஒன்று மாலை 6–40 மணிக்கு சூளகிரியிலிருந்து உலகம் கிராமம் வழியாக இராயக்கோட்டை வரை பயணிகளின் வசதிக்காக இயக்கப்பட்டு வருகிறது. மேலும், சிற்றுந்து ஒன்று, இரவு 7 மணிக்கு பயணிகளின் வசதிக்காக சூளகிரியிலிருந்து உலகம் கிராமம் வரை இயக்கப்பட்டு வருகிறது. மேலும், இந்த வழித்தடத்தில் பயணிகளின் அடர்வு மிகவும் குறைவாக இருக்கின்ற காரணத்தால், இரவு 8–30 மணிக்கு பேருந்து இயக்கப்படுவது என்பது கேள்விக்குறியாக உள்ளது. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலித்து, அந்த வழித்தடத்தில் பேருந்தை இயக்க முடியுமா என்பதை ஆய்வு செய்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன் அவர்கள்.

திரு. பி. முருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்கள் தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக்காலத்தின்போது, வேப்பனஹள்ளி தொகுதி, வேப்பனஹள்ளியிலிருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்து ஒன்று இரவு 10 மணிக்கு இயக்கப்பட்டு வந்தது. அப்பகுதி பொது மக்கள் மற்றும் கல்லூரியில் படிக்கும் மாணவர்களின் நலன்கருதி, அப்பேருந்தை மீண்டும் இயக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், சூளகிரியிலிருந்து இராமன்தொட்டிக்கு ஒரு நகரப் பேருந்தும், ஓசூரிலிருந்து பேரிகை வழியாக சின்னாரதொட்டிக்கு ஒரு நகரப் பேருந்தும் இயக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோலவே, ஓசூரிலிருந்து செல்லும் அரசு mofussil பேருந்துகளை வேலைக்குச் சென்றுவரும் தொழிலாளர்கள், பொது மக்கள் மற்றும் மாணவர்களின் நலன்கருதி, சாணமாவு பேருந்து நிறுத்தத்தில் நிறுத்தி, பயணிகளை ஏற்றி, இறக்கிச் செல்வதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

அதேபோன்று, என்னுடைய வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அதிகளவிலான கிராமங்களில், அதிகமான பேருந்து வழித்தடங்களில் பேருந்துப் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட வழித்தடங்களைக் கண்டறிந்து, பொது மக்களுடைய நலன்கருதி, அவ்வழித்தடங்களில் பேருந்துகளை மீண்டும் இயக்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்கூறிய வழித்தடங்களை ஆய்வு செய்து, அங்கே பேருந்துகளை இயக்குவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஓர் இடத்தை குறிப்பிட்டு அந்த இடத்தில் பேருந்துகளை நிறுத்தி, ஆட்களை ஏற்றி, இறக்கிச் செல்ல

வேண்டுமென்று வேண்டுகோள் ஒன்றையும் இங்கே வைத்துள்ளார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடத்தில் பேருந்து நிறுத்தம் இல்லையென்று சொன்னால், புதிதாக பேருந்து நிறுத்தம் உருவாக்கப்பட வேண்டும். எனவே, அங்கே அதிகாரிகளை அனுப்பி, பேருந்து நிறுத்தம் சம்பந்தமாக ஆய்வு செய்து, பேருந்து நின்று செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். அம்பேத்குமார் அவர்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

முற்பகல் 11–15

திரு. எஸ். அம்பேத்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கழகத் தலைவர் வணக்கத்திற்குரிய அன்புத் தளபதி அவர்களை வணங்குகிறேன். வந்தவாசி முதல் சென்னை வரையிலான வழித்தடத்தில் சாதாரணப் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. அந்த வழித்தடத்தில் பொது மக்களின் நீண்டநாள் கோரிக்கையான A.C. பேருந்து ஒன்றை இயக்க அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், வந்தவாசி to தாம்பரம் கிட்டத்தட்ட 90 கி.மீ. தூரம் உள்ள காரணத்தினால் தினசரி வேலைக்குச் செல்லும் தொழிலாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிக்கொண்டிருக்கின்றது. அதுமட்டுமல்ல, வந்தவாசியைச் சுற்றியுள்ள பகுதிகளில் பட்டுத் துணிகள், பட்டு வேஷ்டிகள், பட்டுச் சேலைகள் நெய்யும் வியாபாரிகள் அவற்றை விற்பனைக்காக சென்னைக்கு எடுத்துச் செல்கின்றார்கள். அவர்கள் அவற்றை குளிர்சாதனப் பேருந்தில் எடுத்துச் செல்வதற்காகவும், இது பொது மக்களின் நீண்டநாள் கோரிக்கையாக உள்ளதாலும் இங்கு குளிர்சாதனப் பேருந்தினை இயக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளிர்சாதனப் பேருந்துகள் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தால் 300 கி.மீ. தூரத்திற்குமேல் உள்ள வழித்தடங்களில் மட்டும் முன்பு இயக்கப்பட்டு வந்தன. தற்போது,

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் ஆலோசனையின்பேரில் 3/2 குறைந்த தூரம் செல்லக்கூடிய புறநகரப் பேருந்துகள், குளிர்சாதனப் பேருந்துகளாகப் படிப்படியாக இயக்கப்பட்டு வருகின்றன. தற்போது, கூண்டு கட்டுகின்ற பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அந்தப் பணிகள் முடிவடைந்தபின் பேருந்துகள் வரும்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய வழித்தடத்தில் குளிர்சாதனப் பேருந்துகள் இயக்க பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 115, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ.பி. சக்திவேல், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

115—

குடமுழுக்கு

***47410—திரு. எ.பி. சக்திவேல்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிராமப்புற திருக்கோயில் திருப்பணித் திட்டத்தின்கீழ் கரிய பெருமாள்கரடு பகுதியில் உள்ள அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலைப் புனரமைப்பு செய்து, குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அறம் எனும் தமிழினத்தின் மாண்பை, அகிலத்தில் நிலைநாட்ட ஆலயங்களில் அன்னதானத் திட்டம் தந்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அன்பான வழியில் தமிழ்நாடு மாநிலத்தை மாட்சியுடன் நல்லாட்சி செய்துவரும் காவேரியின் காப்பாளர், உண்மையை மட்டுமே உரக்கப்பேசி ஊருக்கு உழைத்து வருபவர், உழவர் குலத்தின் ஒளிவிளக்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் அவர்களை வணங்கி, மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவராகிய தங்களையும் வணங்கி, எனது பதிலினைத் தெரிவிக்கிறேன்.